www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com


## இயல்-1 - மொழி - அமுதஊற்று

**திறன் அறிவோம்** (புத்தக வினா) **பலவுள் தெரிக.** **1 மதிப்பெண்**

1. **'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது.** ※ அ. தேர்வு 2019

அ) வணிகக்கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

விடை **அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்**

2. **'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது** ※ அ.மா.வி, கா, தேர்வு 2019, செப்.-2021, ஆகஸ்ட் 2022

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

விடை **ஈ) சருகும் சண்டும்**

3. **எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.** ※ காலாண்டுத் தேர்வு 2019

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

விடை **இ) எம் + தமிழ் + நா**

4. **'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே ...............** ※ பிடிஏ-3

அ) பாடிய, கேட்டவர் ஆ) பாடல், பாடிய
இ) கேட்டவர், பாடிய ஈ) பாடல், கேட்டவர்

**ஈ) பாடல், கேட்டவர்**

5. **வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை-** ※ பிடிஏ-4, மே-2022

அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

விடை **ஆ) மணி வகை**

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

6. **"அன்னை மொழியே" கவிதை இடம் பெறும் நூல்** ※ காலாண்டுத் தேர்வு 2019

அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு
இ) எண்சுவை ஈ) பாவியக்கொத்து

விடை **ஆ) கனிச்சாறு**

7. **'தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!'.** ※ முதல் தி.தேர்வு 2022
**பாடல் அடியில் தென்னன்' என்று குறிப்பிடப்படும் மன்னன் :**

அ) சேர மன்னன் ஆ) பாண்டிய மன்னன்
இ) சோழ மன்னன் ஈ) பல்லவ மன்னன்

விடை **ஆ) பாண்டிய மன்னன்**

8. **"சாகும் போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும்" - என்று கூறியவர்?** ※ ஆகஸ்ட் 2022

அ) திரு.வி.க ஆ) க. சச்சிதானந்தன்
இ) நப்பூதனார் ஈ) தனிநாயக அடிகள்

விடை **ஆ) க. சச்சிதானந்தன்**


enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**9. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்** ※ பிடிஏ-2

அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) இரா.இளங்குமரனார்

விடை ஈ) இரா. இளங்குமரனார்

**10. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?** ※ காலாண்டுத் தேர்வு 2019

அ) பாவாணர் ஆ) கால்டுவெல்
இ) இரா. இளங்குமரனார் ஈ) திரு.வி.க

விடை ஆ) கால்டுவெல்

**11. 'மொழிஞாயிறு' என்று அழைக்கப்படுபவர் யார்?** ※ ஆகஸ்ட் 2022

அ) தமிழழகனார் ஆ) கம்பர்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) வைரமுத்து

விடை இ) தேவநேயப் பாவாணர்

**12. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது** ※ பிடிஏ-1

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

விடை ஈ) வினையாலணையும் பெயர்

**13. வெஃஃஃகுவார்க்கில்லை, உரனசைஇ - இச்சொற்களில் உள்ள அளபெடைகள்** ※ பிடிஏ-6

அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை
ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை
ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

விடை அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை

**14. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர்** ※ அ.மா.வி 2019

அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்
இ) செய்தித்தொடர் ஈ) கலவைத் தொடர்

விடை ஈ) கலவைத்தொடர்

**15. தொடர்மொழி -** ※ காலாண்டுத் தேர்வு 2019

அ) ஆடு மேய்ந்தது ஆ) அருகில்
இ) அம்மா ஈ) அசையாமை

விடை அ) ஆடு மேய்ந்தது

**16. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.** ※ செப்.-2020

| | | | |
|---|---|---|---|
| (1) | வினைமுற்று | (i) | கெடு |
| (2) | தொழிற்பெயர் | (ii) | கட்டு |
| (3) | முதனிலைத் தொழிற்பெயர் | (iii) | எய்தல் |
| (4) | வினையடி | (iv) | வந்தான் |

அ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i) ஆ) (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)
இ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii) ஈ) (1) - (i), (2) - (iii), (3) - (ii), (4) - (iv)

விடை அ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

**17. பொதுமொழியைத் தேர்வு செய்க :** ※ முதல் தி.தேர்வு 2022

அ) கண்ணன் வந்தான் ஆ) எட்டு
இ) படித்தான் ஈ) அம்மா

விடை ஆ) எட்டு

**18. மலர்விழி பாடினாள் - இத்தொடர்:** ※ மே-2022

அ) பொதுமொழி ஆ) தனிமொழி
இ) தொடர்மொழி ஈ) அடுக்குத்தொடர்

விடை இ) தொடர்மொழி

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.surabooks.com www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**திறன் அறிவோம்** (புத்தக வினா) **குறுவினா** **2 மதிப்பெண்கள்**

**1. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**

- வேங்கை என்பது **தனிமொழியாகி** மரத்தையும், புலியையும் குறிக்கும். ※ பிடிஏ-2; கா. தேர்வு 2019
- வேம் + கை எனத் தொடர்மொழியாகப் பிரிந்து '**வேகின்ற கை**' எனப் பொருள் தரும்.
- இது **தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும்** பொதுவாய் அமைவதால் **பொதுமொழியாக** இருக்கிறது.

**2. 'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!** ※ அ.மா.வி 2019, மே-2022
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!' - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

- சீவகசிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

**3. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.** ※

**சரியான தொடர்கள்** : 1. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
2. ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழையான தொடர்** : ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழைக்கான காரணம்** : தாறு என்பது வாழைக்குலையைக் குறிக்கும். **சீப்பு** என்பது அதில் அடங்கிய **வரிசையான பழங்கள்** ஆகும்.

**4. 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்** ※ பிடிஏ-6; அரையாண்டுத் தேர்வு 2019 ஆகஸ்ட் 2022
**வடுக்காண் வற்றாகும் கீழ்' - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.**

- உடுப்பதூஉம், உண்பதூஉம் - **இன்னிசை அளபெடை** வகையைச் சார்ந்தது ஆகும்.
- **இலக்கணம்** : செய்யுளின் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது **இன்னிசை அளபெடை** ஆகும்.

**5. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.** ※

- ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட வருவது **இரட்டுற மொழிதல்** அணி எனப்படும். இதனைச் '**சிலேடை அணி**' என்றும் அழைப்பர்.
- தற்கால உரைநடையிலும் மேடைப்பேச்சிலும் **சிலேடைகள்** பயன்படுத்தப்படுகின்றன.
- **எடுத்துகாட்டு :** சென்னை வரவேற்கிறது என்பதை, சென்னை வர வேர்க்கிறது (**வியர்க்கிறது** என்பதன் பேச்சு வழக்கு) என்று சிலேடை மூலம் **பகடியாகச்** சொல்லலாம்.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

**1. "மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!** ※ அ.மா.வி 2019
**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!"**
**மண்ணுலகப் பேரரசு ....... தென்னன் மகள் ....... திருக்குறளின் மாண்புகழ் ......... மூன்று இடங்களுக்குமான ஒரே விடை என்ன? பாடலின் ஆசிரியர் யார்?**

- செந்தமிழ்
- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com


**2. அன்னை மொழியான தமிழை வாழ்த்தும் வாழ்த்துச் சொற்கள் இரண்டினை எழுதுக.** ※ கா.தேர்வு 2019

பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே,
பாண்டிய மன்னனின் மகளே!
திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே!

**3. எட்டுத்தொகை நூல்களின் பெயர்களை எழுதுக.** ※ முதல் தி.தேர்வு 2022

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

**4. தமிழ்ச்சொல் வளம் குறித்து கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.** ※ பிடிஏ-1

தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் **தமிழுக்கே** சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் **தெலுங்கு, கன்னடம்** முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் **தமிழில்** உள்ளன என்கிறார் **கால்டுவெல்.**

**5. தமிழ்நாட்டு நெல்வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.** ※ அ.மா.வி 2019

- **நெல் வகைகள் :** செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார்.
- **சம்பா நெல் வகைகள் : ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா** முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.

**6. தாவரத்தின் நுனிப் பகுதிகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?** ※ காலாண்டுத் தேர்வு 2019

தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்களைக் **கொழுந்து** என்கிறோம்.

- நெல், புல் - துளிர் (அ) தளிர்
- புளி, வேம்பு - முறி (அ) கொழுந்து
- சோளம், கரும்பு, தென்னை, பனை - குருத்து
- கரும்பின் நுனிப் பகுதி - கொழுந்தாடை எனப்படும்.

**7. பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார் குறித்து எழுதுக.** ※ அரையாண்டுத் தேர்வு 2019

- குமரி மாவட்டம் ஆரல்வாய் மொழியில் 24-6-1907இல் பிறந்தார்.
- தமிழ்நாட்டு **மொழியியல்** வல்லுநர்களுள் ஒருவர். **பன்மொழிப்புலவர்** எனப் பெயர் பெற்றவர்.
- இவர் எழுதிய நூல்கள்: **குமரிக் கண்டம், தென்னாட்டுப் போர்க்களங்கள்.**

**8. தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கினை எழுதுக.** ※ மே-2022

- நெல், கத்தரி - நாற்று
- மா, புளி, வாழை - கன்று
- வாழையின் இளநிலை - குருத்து
- தென்னையின் இளநிலை - பிள்ளை

**9. தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறுகூலங்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.** ※ முதல் தி.தேர்வு 2022

- வரகு ■ காடைக்கண்ணி ■ குதிரைவாலி

**10. பூவின் நிலைகளை வரிசைப்படுத்தி எழுதுக.** ※ ஆகஸ்ட் 2022

- அரும்பு - பூ வின் தோற்ற நிலை
- போது - பூ விரியத் தொடங்கும் நிலை
- மலர் - பூ வின் மலர்ந்த நிலை
- வீ - மரஞ்செடியிலிருந்து பூ கீழே விழுந்த நிலை
- செம்மல் - பூ வாடின நிலை

www.Padasalai.Net
enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**11. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.** ⁜ இரண்டாம் தி.தேர்வு 2022
**மரம், சந்தனம், கொடி, முல்லை, காடு, மணம்**
சந்தன மரம், கொடி முல்லை, சந்தனக்காடு, சந்தன மணம், முல்லை மணம், கொடி மரம்

## திறன் அறிவோம் (புத்தக வினா) | சிறுவினா | 3 மதிப்பெண்கள்

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?**
- தமிழ்மொழி **பழமைக்குப் பழமையாய்** உள்ளது. கடல் கொண்ட **குமரிக் கண்டத்தில்** நிலைத்து ஆட்சி செய்தது. ⁜ பிடிஎ-2, மே-2022
- பாண்டிய மன்னனின் **மகளாக** வளர்ந்தது. **திருக்குறளின்** பெருமைக்கு உரியதாய் விளங்குகிறது.
- **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை** போன்ற இலக்கியங்களின் வடிவில் அன்னைத் தமிழ் இருப்பதால் வாழ்த்துகிறேன் என்று பாவலரேறு சுட்டுகிறார்.

**2. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'.** ⁜ பிடிஎ-3; கா.தேர்வு 2019, மே-2022
**இது போல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க:**
- கண்ணன் வயலில் **நெல் நாற்றிற்குத்** தண்ணீர் பாய்ச்சினான்.
- தாத்தா **தென்னம்பிள்ளை** வாங்கி வந்தார்.
- **மாங்கன்று** மழைக்குப் பிறகு தளிர் விட்டது.
- **சோளப் பைங்கூழ்** செழுமையாக உள்ளது.
- வயலைச் சுற்றி **வடலியைக்** கண்டேன்.

**3. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.** ⁜

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அறிந்தது | அறிதல் | தெரிந்தது | தெரிதல் |
| அறியாதது | அறியாமை | தெரியாதது | தெரியாமை |
| புரிந்தது | புரிதல் | பிறந்தது | பிறத்தல் |
| புரியாதது | புரியாமை | பிறவாதது | பிறவாமை |

**4. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.** ⁜ பிடிஎ-6; கா. தேர்வு 2019
**தமிழ் :**
- **இயல், இசை, நாடகம்** ஆகிய முத்தமிழாய் விளங்குகிறது.
- **முதல், இடை, கடை** ஆகிய **முச்சங்கங்களால்** வளர்க்கப்பட்டது.
- ஐம்பெருங்காப்பியங்களை **அணிகலன்களாகப்** பெற்றுள்ளது.
- சங்கப் பலகையில் இருந்து **சங்கப் புலவர்களால்** பாதுகாக்கப்பட்டது.

**கடல் :**
- **கடல் முத்தினையும்** அமிழ்தினையும் தருகிறது.
- **வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம்** ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது.
- மிகுதியான **வணிகக் கப்பல்கள்** செல்லும்படி இருக்கிறது.
- **நீரலையைத்** தடுத்து நிறுத்தி **சங்கினைக்** காக்கிறது.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## பிடிஎ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

1. **நிலவகைகளைக் குறிக்கும் சொற்கள் மூன்றினையும் நீர்நிலைகளின் வகைகளைக் குறிக்கும் சொற்கள் மூன்றினையும் எழுதுக.** [முதல் தி.தேர்வு 2022]

**நிலவகைகள்** : தரிசு, சிவல், கரிசல், முரம்பு, புறம்போக்கு, சுவல், அவல்

**நீர்நிலை வகைகள்** : குளம், குட்டை, ஏரி

## திறன் அறிவோம் (புத்தக வினா) நெடுவினா

1. **மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.** [பிடிஏ-5 அ.மா.வி, கா.தேர்வு 2019; ஆகஸ்ட் 2022]

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை<br>பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து<br>பாவலரேறு தமிழ் வாழ்த்து<br>முடிவுரை |

**முன்னுரை:**

**தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்**
**தமிழ் எங்கள் அசதிக்கு சுடர்தந்த தேன்!**

என்ற பாவேந்தரின் தமிழ்ப்பற்றைப் போற்றி வணங்குகிறேன். அனைவருக்கும் வணக்கம். இங்கு **மனோன்மணீயம்** அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் **பாவலரேறு** அவர்களின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு பார்ப்போம்.

**பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து:**

என் தமிழ்த்தாய் **கடலையே** ஆடையாக அணிந்திருப்பவள். அவளின் அழகிய **திருமுகப் பாரத கண்டமாக** திகழ்கிறது. அம்முகத்திற்கு **பிறைநிலா** போன்ற நெற்றியாகத் **தக்காணப் பீடபூமியும்,** நெற்றியில் பொட்டு வைத்தது போல **தமிழகமும்** உள்ளது. பொட்டின் மணம் எல்லோரையும் **இன்புறச் செய்வது** போல் தமிழ்த்தாய் எல்லாத் திசைகளிலும் **புகழ்** பெற்றவளாக இருக்கிறாள்.

உலகின் **மூத்தமொழியாகவும்** இன்னும் **இளமையாகவும்** இருக்கின்ற உனது திறமையை வியந்து **தாயே!** உன்னை **வாழ்த்துகின்றேன்** என்று மனோன்மணீயம் வாழ்த்துகிறார்.

**பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து :**

அன்னைத் தமிழை **அழகு நிறைந்த செந்தமிழ்,** பழமைக்குப் பழமையாக தோன்றிய **நறுங்கனி.** கடல் கொண்ட **குமரிக் கண்டத்தில்** நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசு, **பாண்டிய மன்னனின் மகள்,** திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவள் என்றும் **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை** போன்ற இலக்கியங்களை தன்னுள் கொண்டுள்ளதால் தலைபணிந்து வாழ்த்துகின்றேன்.

பழம்பெருமையும் தனக்கென தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே! வண்டானது **செந்தாமரைத் தேனைக்** குடித்துச் சிறகசைத்து பாடுவது போன்று உனது உன்னைச் சுவைத்து உள்ளத்தில் **இன்பத்தீ** பொங்கி எழ உன் சிறப்புகளை எல்லாத் திசைகளிலும் **முழங்குகின்றேன்** என்று கூறுகிறார்.

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com


**முடிவுரை :**

இவ்வாறு தமிழின் பெருமை, பழமை, சிறப்பு, வியப்பு என எல்லாவற்றையும் **மனோன்மணீயம் பெ.சுந்தரனார்** அவர்களும் **பெருஞ்சித்திரனார்** அவர்களும் தமிழின் பெருமையைப் போற்றி வாழ்த்துகின்றனர். நன்றி. வணக்கம்.

2. **தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.** பிடிஏ-2; செப்.-2021; மே-2022

**முன்னுரை:**

**பொருள்வளம், சுவைவளம், சொல்வளம்** என எல்லாவற்றிலும் குறையே காண முடியாத மொழி, தமிழ்மொழி. இதன் சிறப்பை, சில சொற்களின் உருவாக்க அடிப்படையில் கண்டு வியக்கலாம்.

**சொல் வளம் :**

தமிழ்நாட்டுப் பொதுமக்கள் **உயர்ந்த** பகுத்தறிவுடையவர்கள். எத்துணையோ மொழிகளினின்று கடன் கொண்ட ஆங்கில மொழியிலும், நூலிலும் **இலையைக்** குறிக்க Leaf என ஒரே சொல் மட்டுமே உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப் பொதுமக்களைப் போல **வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை** எனத் தமிழர் பாகுபாடு செய்தாரில்லை.

தமிழில்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள **ஒரு பொருட் பலசொல்** வரிசைகள் பிறமொழிகளில் இல்லை. தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் **தமிழுக்கே** சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் **தெலுங்கு, கன்னடம்** முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் **தமிழில்** உள்ளன என்கிறார் **கால்டுவெல்.**

**தாவரங்களில் தமிழ் சொல் வளம் :**

தாவரத்தின் **அடிவகை, கிளைப்பிரிவுகள், காய்ந்த அடிப் பகுதி, இலை வகை, கொழுந்து வகை, பிஞ்சு வகை, குலை வகை** மற்றும் **கெட்டுப்போன காய்கனி வகை, பழத்தோல், தானியங்களின் வகை, இளம் பயிர் வகை** போன்றவற்றிற்கான சொற்கள் இவ்வுரையில் உள்ளன. இது காணும் தமிழ் சொல்வளமுடையது என அறியலாம்.

**புதிய சொல்லாக்கத்திற்கான தேவை :**

திருந்திய மக்களை மற்ற **உயிரினின்றும்** பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு **நாட்டாரின்** அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும். பொருளைக் கூர்ந்து நோக்கி **நுண்பாகுபாடு** சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக் கொள்ள வேண்டும். அறிவியல் வளர்ச்சியினால் ஏற்பட்ட புதிய சொற்களுக்கான **கலைச்சொல்** வளத்தைப் **பறை சாற்றுதல்** அவசியமாகும். தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்கவும், தமிழுக்குச் சிறந்த எதிர்காலம் வேண்டுமாயின் **புதிய சொல்லாக்கம் தேவை.**

பிறமொழிச் சொற்கள் **தமிழில்** கலந்தால் தமிழின் **இனிமை** குறையும். அத்துடன் தமிழ்ச் சொற்கள் நாளடைவில் மறைந்து **அயல்மொழிச்** சொற்களே **நிலைபெற்றிட** வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய நிலை ஏற்படாதிருக்க தமிழில் **புதிய கலைச்சொற்களை** உருவாக்க வேண்டும். நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் **கருவிகள், வேளாண்மை, மருத்துவம், பொறியியல், தகவல் தொடர்பியல்** முதலான துறைகளுக்குப் பயன்படும் சொற்களைத் தமிழில் சொல்லாக்கம் செய்து நம் மொழியின் வளத்தைப் பெருக்க வேண்டும்.

**முடிவுரை:**

வேருக்கு நீர் புத்துணர்வு அளிப்பது போல், ஒரு மொழியை சொற்களே மறுமலர்ச்சி அடைய செய்கிறது. ஆக சொல்வளமே மொழியைக் காப்பதில் பெரும் உதவி செய்கிறது.

www.Padasalai.Net
www.surabooks.com
enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**3. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக. சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.** ※ பிடிஏ-2

**உறவினர் மகள் (மாலா)** : (ஆங்கிலச் செய்தித்தாள் படித்துக் கொண்டிருக்கிறார்.)

**செந்தமிழ் செல்வி** : என்ன மாலா! தமிழ்ச் செய்தித்தாள் படிக்கின்றாயா?

**மாலா** : செய்தித்தாள்தான். ஆனால் தமிழ் இல்லை. ஆங்கிலம்தான்.

**செந்தமிழ் செல்வி** : ஏன் தமிழ் படிக்கத் தெரியாதா?

**மாலா** : இல்லை. தமிழ் நன்றாகப் பேசுவேன். படிக்கத் தெரியாது. எனக்குத் தமிழ் நூல்கள் படிக்க விருப்பம்தான்.

**செந்தமிழ் செல்வி** : தமிழ் மிகவும் **எளிமையான மொழி**. அம்மொழியைப் பேசுவது எவ்வளவு எளிமையோ படிப்பதும் அவ்வளவு எளிமைதான்.

**மாலா** : அப்படியா?

**செந்தமிழ் செல்வி** : தமிழ் உரைநடைக்குக் கருத்துகள் தெரிந்தால் அவற்றை எளிதில் எழுதலாம். **வாக்கியமைப்பு திணை, பால், எண், இடம், காலம்** பொருந்தியும் **எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்** சரியாக அமைந்தால் போதும்.

**மாலா** : உரைநடை என்கிறாயே அது என்ன?

**செந்தமிழ் செல்வி** : செய்யுள் என்பவை **எதுகை, மோனை, இயைபு, அணி** என்று பல நயங்களால் அழகுப்படுத்தப்பட்டிருக்கும். **உரைநடை** அவ்வாறு இல்லை. உரைநடை என்பது **தொல்காப்பியர்** காலத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

**மாலா** : அப்படியா?

**செந்தமிழ் செல்வி** : **இறையனார் களவியல் உரை, இளங்கோவடிகள் உரை** என வளர்ந்து வந்துள்ளது. **திரு.வி.க, மு.வ., அண்ணா** போன்றோர் இருபதாம் நூற்றாண்டில் உரைநடை வளர்ச்சிக்குக் காரணமாக இருந்துள்ளனர்.

**மாலா** : உரைநடை வடிவில் வரும் இலக்கியங்கள் யாவை?

**செந்தமிழ் செல்வி** : **சிறுகதை, புதினம், புராணக் கதைகள்** இவையெல்லாம் உரைநடையே. உரைநடை வளர்ந்ததால் நாம் பிறமொழி நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து **பாரதியின்** அவாவை நிறைவேற்றியுள்ளோம்.

**மாலா** : **வீரமாமுனிவர், ஜி.யு.போப்** போன்ற சான்றோர்களும் இப்பணியைச் செவ்வனே ஆற்றியுள்ளார்கள் அல்லவா?

**செந்தமிழ் செல்வி** : சரியாகச் சொன்னாய். **கால்டுவெல்** தமிழுக்கு ஆற்றிய பணிகள் ஏராளம். இவர் தமிழ்மொழியின் சிறப்பைத் தமிழருக்குக் கூறியவர். உரைநடை வளர்ந்து வருவதால்தான் தமிழ் இலக்கியங்களைப் பிறர் அறிய முடிகிறது.

**மாலா** : தமிழ்மொழியை அறியாதவர்களால் தமிழைப் படித்து நூல்கள் இயற்றும் போது எனக்குத் தமிழ் பேசத் தெரியும். கற்பது என்ன கடினமா? இன்றே எனக்கு தமிழ் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடு. நானும் கற்றுக் கொள்கிறேன்.

**செந்தமிழ் செல்வி** : சரி, வா!

enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com